[2013 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

246—

நியாய விலைக் கடை

*17957—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, நெடுங்குளம் ஊராட்சி, கள்ளிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், நெடுங்குளம் ஊராட்சியில் கோபாலன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கோபாலன்பட்டியில் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடையிலிருந்து பிரிக்கப்பட்ட கள்ளிப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை 172 குடும்ப அட்டைகளுடன் 1-1-2012 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, அப்பகுதியில் மீண்டும் பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.